சிவமயம்

Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

குரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்—சர்வசித்துஞு ஆனி மீ ௬ ௨ (1947 ஜூன் 20 வெள்ளிக்கிழமை) [இல ௨௨

## பிரார்த்தனை

அடியார்நிமலத் திருவகத்து ளன்புபொறுமை யவாவறுத்தல்
உடுப்பாங் கமைத்து மலக்காட்டத் தத்க நானக் கனல்மூட்டி
மடியாதிருந்த உயிர்க்கலகம் வழிபஅருட்பே ருலைவார்த்து
மாறுக்கருணைச் சிவானந்த மதுரச்சோறு தினம்பொங்கி
விடியாச்சீவ போதவிருள் வீயமௌனச் சுடர்விளக்கு
விளக்கியிருந்த படியிருந்து மேலாம் சிற்றில்விளையாடும்
சேடிதீர் மனத்தோர் புகழ்வாலைசிறுவா! சிற்றில்சிதையேலே
தேரூர்வீதிப் போரூரா! சிறியேம்சிற்றில் சிதையேலே.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை.

## நிஸாம் அட்டூழியம்

### ஹிந்துக்கள் இனிச் சகிப்பரா?

ஹைதராபாத்தின் நிஸாம் மன்னர் ஓர் முஸ்லீம்; ஆனால் அவருடையபிரஜைகளில் 100க்கு 86 விகிதமானவர்கள் ஹிந்துக்கள். இப்படியிருப்பவும், இந்த நிஸாம்மன்னர், இந்தியச் சமஷ்டியுடன் சேராது, தனியே நிற்க முயற்சிக்கிறார்.

நிஸாம் மன்னர் தான் இதுவரை ஜின்னாவின் பிடிவாதக் கொள்கைகளுக்கு ஆதரவு கொடுத்தவர் என்றும, தாம் நினைத்தபடி பாகிஸ்தான் கிடைத்தால், அந்தப் பாகிஸ்தான் சாம்ராஜ்யத்தில் தான் சக்கரவர்த்தியாகலாம எனறும் மனப்பால் குடித்தவர். அவர்இப்போது திண்டாடுகிறார். இப்போது இவருடைய ஹைதராபாத் சமஸ்தானத்திலே ஹிந்துக்களுக்கு விரோதமான சதிச்செயல்கள் நிகழ்கின்றன வென்று ஜபல்பூர் ஹிந்தி வாரப்பத்திரிகையான "சக்தி" ஆசிரியர் ஸ்ரீஜகந்நாத் என். ஆர். சுக்லா கூறுகிறார்.

ஹிந்து நிலச் சுவான்களிடமிருந்து அவர்களுடைய நிலத்தை நிஜாம் அரசினர் துங்கபத்திர அணைத் திட்டத்திற் கென்று கூறிக் காலிசெய்து விடுகிறார்களாம். ஹிந்துக்களிடமிருந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை முஸ்லிம்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஹிந்துக்களை வெருட்டிவிட்டு அந்த இடங்களில் முஸ்லிம்களைக் குடியேறச் செய்கின்றனர். ஹிந்து ஜமீன்தார்கள் தொழிலாளர் நிலைமைக்கே வந்துவிட்டார்கள்

ஹிந்துக்கள் 100க்கு 86 விகிதமிருந்தபோதிலுங் கூட அவர்களுக்குப் பிரஜா உரிமைகள் கிடையா. ஹிந்துக்கள் முஸ்லிம்களாக மாற்றப்படுவது பகிரங்கமாக நடைபெறு

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## நீதியானது!

### கொலன்னாவைத் துப்பாக்கிச் சம்பவம்

அரசாங்கக் கிளார்க்குமார் வேலைநிறுத்தத்தின்போது சென்ற 5-6-47 இல், கொலன்னாவை றோட்டில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் திரு வி. கந்தசாமி என்பவர் கொல்லப்பட்டது சம்பந்தமாக விசாரணைபுரிந்த கொழும்பு நீதிபதி மிஸ்டர் மேர்வின் ஜோசப் தமது தீர்ப்பை இப்போது வெளியிட்டிருக்கிறார்.

பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை நீதியே என்றும், திரு கந்தசாமியின் மரணத்தின் பொருட்டு அவர்களைக் குறைசொல்ல முடியாதென்றும், பொலிசார் தம் கடமையை முறைப்படியே ஆற்றினர் என்றும் ஷை நீதிபதி தமது தீர்ப்பிற் கூறியுள்ளார்.

## பயங்கர இயக்கம்

### மேன்மேலும் பரவுகிறது

இலங்கையில் அரசாங்கக் கருமங்களை ஸ்தம்பிக்கச் செய்வதை லட்சியமாகக் கொண்டு, சமசமாஜிகளால் ஆரம்பிக்கப்பட்ட பயங்கர இயக்கம் ஒழிந்துவிட்டதாகத் தெரியவில்லை.

சென்ற சனிக்கிழமை இரவு வடபகுதிப் புகைரதப்பாதையில், முறிகண்டிக்குச் சமீபமாக, ஓர் புகைரதக் காவலர் பாதையைப் பரிசோதித்துக் கொண்டு செல்லும்போது, காட்டுக்குள் மறைந்திருந்த மூன்றுபேர் தோன்றி, அவரைச் சுட்டுவிட்டு ஓடிவிட்டனர். காயமடைந்தவர் புகைரதப்பாதையில் வீழ்ந்து பிரக்ஞையற்றுக் கிடப்ப, யாரோ சிலர் கண்டு மாங்குளப் புகைரதஸ்தானத் தலைவர்க்கு அறிவித்தார். உடனே புகைரதப்பகுதியார் வந்து. காயமடைந்தவரை உடன் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினர் அங்கே அவர் மரணமடைந்தார்.

#### வாதுவையில்

வாதுவைப் புகைரதப்பாதையில் ஓர் பெரிய இரும்புக்கம்பி குறுக்கே வைக்கப்பட்டிருந்தது. நல்லவேளையாக, அப்பாதைபால் வந்த புகைரதத்தின் என்ஜின் சாரதி அதனைக் கண்டு, புகைவண்டியை நிறுத்திக் கம்பியை அப்புறப்படுத்திவிட்டார். அல்லாவிட்டால் புகைரதம் நிச்சயம் கவிழ்ந்து சொல்லமுடியாத அநர்த்தம் விளைந்திருக்கும்.

#### சண்டித்தனம்

கொழும்பு அரிசிக்குதத்தில் வேலை செய்யும ஆட்களை வேலைநிறுத்தம் செய்யுமாறு தூண்டி வெருட்டிச் சண்டித்தனம் காட்டிய ஓர் தொழிற்சங்கஉத்தியோகத்தர் இப்போது சிறையிலடைக்கப்பட்டிருக்கிறார்.

## உருவ வழிபாடு

[ஸ்ரீமத் இராமகிருஷ்ணானந்த சுவாமிகள்]

ஹிந்துக்களாகிய நம்மைப் பிறமதத்தினர் 'விக்கிரக ஆராதனை செய்வோர்' எனக் கூறிப் பரிகசிக்கின்றனர். வெளிநாட்டார் நமது ஆராதனை முறைகளை உண்மையில் அறியாததே அதற்குக் காரணமாகும். கடவுளை உருவகித்து ஆராதனை செய்தலே உயர்ந்த முறையாகும். ஏனென்றால் அப்போதுதான் மனிதனால் உண்மை அன்பு செய்தல்கூடும். இயற்கையில் கடவுள் கட்டுக்கடங்காத ஓர் பராபர வஸ்துவே. ஆனால் அன்பின் சக்தி அவருக்கு உருவத்தை அளிக்கிறது. உருவம் பெற்ற கடவுள் மனதைக் கவர்ச்சி செய்கிறது. அப்போதுள்ள பக்தியின் பெருக்கும், திண்மையும் மிகவும் அதிகம், உருவற்ற பொருட்கே உருவம் அளிக்க வல்லதென்றால் பக்தியின் பெருமையை என்னென்பது? பிற மதங்கள் கடவுளை மனிதன் நிலைக்கு ஒப்பிட மறுக்கின்றன. அவைகள், கடவுளை மனதிற்கெட்டா பரம்பொருள் என்றும், சர்வ வல்லமையுள்ளவன் என்றும், சர்வ வியாபி எனவும் கூறுகின்றன. ஆனால் சர்வசக்தியுள்ள ஓர் உருவற்ற கடவுள் ஏன்உருவுடன்வரமுடியாது? கடவுள் என்ன வேண்டுமானாலும் செய்தல்கூடும். கடவுளின் மாயா சக்தி மட்டற்றது மாயாசக்தியால் தன்னை எப்படிச் செய்துகொள்ள இஷ்டமோ அப்படிச்செய்துகொள்ள அவனால் முடியும். மாயைக்கு அதிபதி அவனே. தவிர ஆண்டவன் அழிவற்றவன். காலம், கருவி, இடம் இவைகட்கும் மேலானவன். சத்து, சித்து, ஆனந்தம் என்ற மும்மயமான மூலப்பொருட்கும் காரணமானவன்.

எனவே தனது இச்சா சக்தியால் பக்தர்கள் வேண்டிய உருவம் எடுத்துக்கொண்டு வர ஆண்டவனால் முடியும். கடவுளிடம் அழியவல்ல அற்பப் பொருள்களை யாசிப்பது பேடித்தன்மையாகும். அப்படிக் கேட்கும் மனமுடைய பக்தர்கள் உண்மை அன்புடையோரல்லர். நமது மூதாதையர்கள் கடவுளிடம் எதையும் கேட்கவில்லை. கோவில்கட்குச்சென்று கடவுளை நோக்கி, 'இதைக் கொடு, அதைக்கொடு' என்று கேட்டுத் தொழுதால் உண்மைப் பக்தர்களாக ஆவதற்கு ஒருநாளும் முடியாது. கடவுள் பக்தி ஒன்றே குறிக்கோளாய் இருத்தல்வேண்டும். இந்துக்கள் இதற்கு ஒருவழி கண்டுபிடித்திருக்கிறார்கள். மக்கள் ஆண்டவனை விஷ்ணுவாகவும்' சிவனாகவும், இராமனாகவும் தத்தமக்கு எப்படி இஷ்டமோ அப்படி வணங்குகிறார்கள். உண்மையான பக்தியே அவர்களை அப்படி வணங்கச் செய்தது இப்படி வணங்குவதில்ஒருவித தப்பும் கிடையாது. கடவுளை நமது நண்பனாகவும்; ஆண்டானாகவும் கொண்டு வழிபடலாம். அவனுக்கு ஒரு வீடும் கட்டித்தரலாம். அது மட்டுமா? நமது நண்பருக்கோ அல்லது எஜமானருக்கோ அவர்கள் வேண்டிய பொருள்களைத் தருவதுபோல் கடவுளுக்கும் பலவற்றைத்தரலாம். அவனிடமிருந்து கேட்பதற்குப் பதிலாக இம்மாதிரி நாமே பலவற்றை அவனுக்குக் கொடுக்க முயல்வதே சிறந்ததாம். இத்தகைய வழிபாடு உண்மை அன்பால் தோன்றுவது. தன்னலமற்றது. இதுதான் உயர்ந்த பக்தி மார்க்கத்திற்கொண்டுவிடுக்க வல்லதாம். இத்தகைய பக்தியால்தான் இந்தியாவில் பலர் முத்தியடைந்திருக்கின்றனர். கௌரங்கர், மற்றும் அவரது சிஷ்யர்கள் பலரும் விக்கிரக ஆராதனை செய்தவர்களே. தென் இந்தியாவில் தோன்றிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் இத்தகைய மார்க்கத்திற் சென்றே ஆண்டவனடியாம் கரையை அடைந்திருக்கின்றனர், ஸ்ரீ ராமகிருஷ்ணர் முறையும் இது என்பது சொல்லாமலே நமக்குத் தெரியும். அவர் ஜகன்மாதாவைச் 'சக்தி' என்று வழிபட்டு உயர்ந்த நிலையை அடைந்தார்.

எனவே கோவில்களில் உள்ள விக்கிரகங்கள் எல்லாம் நமது மனத்தைக் குவியச் செய்தற்கும், லயிக்கச் செய்தற்கு மாத்திரம ஏற்பட்டனவல்ல. விக்கிரகங்கள் மனிதனின்உள்ளக் கவர்ச்சிக்கே ஏற்பட்டனவெனச் சிலர் கூறலாம். ஆனால் நமது முன்னோர்களின் உயர்ந்த நோக்கமென்னவென்றால் நம்மிடத்துள்ள தன்னலமற்றதாகிய உயர்ந்த பக்தியை உண்டுபண்ணுவதேயாகும். இத்தகைய கோவில் வழிபாட்டை— விக்கிரக ஆராதனையை — மேலான கொள்கையே அல்லவெனச் சொல்வது மூடத்தன்மையேயாகும். உருவம் அற்றவனே எனினும், கடவுள் உருவம் உள்ளவனேயாவான். இந்திரியங்களை உள்ளடக்கிய ஒருவன் ஆண்டவனைத் தன்னுள்ளே கண்டானந்தித்தல்கூடும். இத்தகைய வழிபாடும் நம் இந்திய நாட்டில்தான் உண்டு என்பதற்காக நாம் பெருமையும் பேசிக்கொள்ளலாம். கண்ணைத் திறந்து உலகத்தை நோக்கின் எங்குங் இறையொளி வீசுவதைக் காணலாம். சூரியசந்திரர்கள் பிரகாசிக்கும் இப்பரந்த ஆகாயமே ஆண்டவனின் கோவிற் கூரை. பூமிதேவியே அக்கோவிலின் தரையாகும்: இவ்வுலகில் வாழும் நாம் அனைவரும் மேற்சொன்ன இயற்கைக் கோயிலில் வதியும் நடமாடுந் தெய்வங்கள். நமது ஹிருதயகமலத்தில் வீற்றிருக்கும் கடவுள் நுண்ணியதினும் மிக நுண்ணிதாயும், பெரிதினும் மிகப் பெரிதாயும் இருக்கின்றான். நம்மிடமிருக்கும் ஆண்டவனை மறந்துவிடுதல் நமக்குச் சாதாரணமாகிவிட்டது. 'ஆண்டவன் எங்கும் நிறைந்தவன்' என்பதை நினைப்பூட்டுவதற்காகவே ஆங்காங்கு கோயில்கள்கட்டப்பட்டுள்ளன. கோயில்களே பக்தி மார்க்கத்தின் தூண்டுகோல்கள். கோயில்களே மிகப் புனிதமான இடம். பல பக்தர்கள் சென்று வழிபட்டு, முக்தியடைந்த இடம் கோவில்களேயாகும். சர்வவியாபியான ஆண்டவனை எங்கும் காணலாமாதலால் கோவிலிற் கண்டு தரிசித்தல் மிகச் சுலபமேயல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஷூ
ஆனிமீ ௩உ செவ்வாய்க்கிழமை

## இலங்கைக்குச் சுயராச்சியம்

இந்தியநாடு சுயராச்சியம் பெற்றுவிட்டால் இந்த இலங்கைக்குச் சுயராச்சியம் கிடைக்குமென்ற கொள்கை அரசியல் அறிஞர் பலரிடத்திற் குடிகொண்டிருந்த தெனலாம்; இலங்கை மக்கள் இப்போதைக்குக் கிடைக்குமென எதிர்பார்த்திராத சுயராச்சிய சம்பந்தமான ஒரு நற்செய்தியைச் சென்ற புதன்கிழமை (16-6-47) இலங்கை அரசாங்கசபை விசேஷ கூட்டத்தில், தேசாதிபதிய கியஸோர் ஹென்றி மூர் தெரிவித்தனர்; இலங்கைப் புதிய பாராளுமன்றப் பரிபாலனம் நடைபெறத் தொடங்கியபின்னர், குறித்த பாராளுமன்றத்தினருடன் சில ஒழுங்குகளைச் செய்துகொண்டு இலங்கை மக்களுக்குப் பிரசைகள் பொறுப்பான சுயராச்சியத்தை விரைவிற் கொடுத்தற்காகிய முயற்சிகள் செய்யப்படுமென்பதே தேசாதிபதியவர்கள் தெரிவித்த செய்தியின் தாற்பரியமாகும்.

சேற்றிலே தாமரை பிறப்பதுபோல, தீமையிலிருந்து நன்மை முளைப்பதும் உலகி லுண்டல்லவா; இரண்டாம் உலக யுத்தந் தொடங்கிய காலத்தில் உலகிலே மூன் எககாலத்தும் நேராத அநர்த்தங்கள் உயிர்ச் சேதம் பொருட்சேத மெல்லாம் நேர்ந்தனவெனினும், அந்தப் பயங்கரமான யுத்தத்தின் பயனாகவே ஐரோப்பாக் கண்டத்திலும் அமெரிக்காக் கண்டத்திலும் அதிகாரம் செலுத்திய சாதியினர்க்குத் தாம் நூற்றுக்கணக்கானவருடங்களாக அடிமைப்படுத்தியாண்ட கிழக்குத்தேசநாடுகளுக்குச்சுயராச்சியங் கொடுக்காமல் முடியாது என்ற நோக்கம் பிறக்கலாயிற்று; இந்தநோக்கம் மேலே சொல்லப்பட்ட அதிகாரிகளிடத்தில் மனப் பூர்வமாக எழுந்ததன்று; யுத்தம் முடிந்த பின்னர் உலகிலே யுண்டான பெரும் மாறுதல்களும் ஒவ்வொரு சாதியார்மாட்டும் எழுந்த சுவதந்திர வேட்கையும் ஐரோப்பிய அமெரிக்க அதிகாரிகளிடத்தில் இனிமேற் சுயராச்சியம் கொடாமல் எச்சாதியினரையும் அடக்கியாள முடியாதென்ற புத்தியைப் புகட்டிவிடலாயின.

இந்த நல்ல செய்தியைக் கேட்ட அளவில்,இலங்கை மக்களனைவருக்கும் மகா சந்தோஷமாகத்தா னிருக்கும்; மேலும் இனி விரைவில் வரவிருக்கும் இலங்கைப் பாராளுமன்றப் பரிபாலனத்திற்கு அற்ப ஆயுள்தா

# நல்ல காலம்



## மணிவாசகப் பெருமான்

### வருகிற திங்கட் கிழமை குருபூஜை

பரமபிதாவாகிய இறைவனே அந்தணனாகி ஆண்டுகொண்டருளப்பெற்றவரும், அந்தக் கருணாநிதியையே குதிரைச்சேவகனாய் மதுரைப் பெருநன் மாநகரில் எழுந்தருளி பாண்டியனுக்குப் பரிமா விற்கச் செய்தவருமான எங்கள் மணிவாசகத்தெந்தையின் குருபூசை வருகிற திங்கட்கிழமை சைவ உலகெங்கும் கொண்டாடப்படவிருக்கிறது. அத்தினம் ஓர் புனித தினம். உலோகாயுதத்தையும், நாஸ்திகத்தையும் எங்கள் ஹிந்துஸ்தானத்திலே வேரறுத்த மணிவாசகப் பெருமான் சோதியுட் கலந்த புனித தினம் அத்தினத்தை மங்களமாக நாம் கொண்டாடுவோமாக.

இந்த அணுக்குண்டு யுகத்திலே மேனாட்டு உலகாயுதத் தாக்குதலின் பயனாக எம்மவர் தட்டுக்கெட்டுத் தடுமாறி "அதுவோ, இதுவோ" என்று எதற்கும் சந்தேகங்கொண்டு அந்தச் சந்தேகத்தை வாழ்க்கையிலேயே அடிப்படையாகக் கொண்டு காமம் ஆற்றும் இந்தச் சஞ்சலகாலத்திலே, மணிவாசகப் பெருமானின் வாழ்க்கை, எங்கள் எல்லார்க்கும் நல்வழிகாட்டவல்ல ஓர் விண்மீன் என்று விளங்காநிற்கின்றது.

மாசறு மணிபோற் பன்னாள்
வாசக மாலைசாத்திப்
பூசனை செய்து பன்னாட்
புண்ணிய மன்றுளாடு
மீசனடிக்கீ ழெய்தி
யிறிலா வறிவானந்தத்
தேனொடு கலந்து நின்றார்
சிவனருள் விளக்க வந்தார்.

## நமக்கினி வருமா?

இன்று "பறைதட்டிய" ஒருபடி அரிசியுடனும், ஒரு ருத்தல் மாவுடனும் ஒரு மனிதன் தன் வாழ்நாளைக் கழிக்கவேண்டி யிருக்கிறது. இந்தக் கேவல நிலைமை எப்போது மாறும் என்று அங்கலாய்ப்புடன் எதிர்பார்த்துநிற்கும் இலங்கை ஜனங்களுக்கு இலங்கை யரசாங்கம், இப்போதுள்ள மாவிநியோக அளவை அதிகரிக்க நிச்சயித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஓர் விஷயமாகும். 16-6-47 தொடக்கம் மாவிநியோக அளவு சாதாரண ஆள் ஒன்றுக்கு இரண்டு இருத்தல் விகிதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. 16-6-47ல் சங்கக்கடைகளிலோ, வியாபாரிகளிடமோ, இரண்டு இருத்தல் விகிதம் பெறாமல் இருப்பவர்கள், 23–6–47இல் அப்படி வாங்காமல்விட்ட மாவையும் சேர்த்து வாங்கிக்கொள்ளலாம் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது, இதுசம்பந்தமான விளம்பரம் ஒன்று வருகிற 24-6-47 செவ்வாய்க் கிழமைப் பிரசுரத்தில் வெளிவரும்

அரிசிநிலைமையும் இப்போது திருப்திகரமாயிருக்கிறது என்று தெரிகிறது. சென்றவாரம், சிங்கப்பூரில் நிகழ்ந்த உணவுமகாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாகச் சென்ற, இலங்கை உணவுப்பகுதி யதிகாரி ஸ்ரீ கே ஆழ்வாப்பிள்ளை அவர்கள், இலங்கையின் அரிசிநிலைமையைப்பற்றித் திருப்தியடைகிறார். அவர் இவ்விஷயமாக பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றிலிருந்து, ஜூலைமாதத்துடன் அரிசி விநியோக அளவும், இரண்டு படியாக அதிகரிக்கப்படலாம் என்று யூகிக்கக்கிடக்கின்றது.

மணிவாசகப் பெருமான்
கழலடி வாழ்க!
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக வுலக மெல்லாம்!

## பிரிட்டிஷ் தந்திரம்

### கபார்கான் அம்பலப்படுத்துகிறார்

இந்தியாவின் வடமேற்கெல்லைப்புறத்தைக் காங்கிரசின் செல்வாக்கிலிருந்து அகற்றி, அதனைப் பாகிஸ்தானுடன் சேர்ப்பதற்கு பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர் என்றும், இப்படி அவர்கள் செய்வது தங்கள் சொந்த நன்மையையிட்டென்றும், எல்லைப்புறக் காந்தியான கான் அப்துல் கபார்கான் ஓர் நண்பருக்கெழுதிய கடிதம் ஒன்றில் தெரிவிக்கிறார்.

எல்லைப்புறம் தம்செல்வாக்கில் இருக்குமானால், ருஷியா தலைநீட்ட முடியாமல் செய்துவிடலாம் என்பதே பிரிட்டிஷாரின் நோக்கம். ஜின்னா எப்படியோ தம் பாகிஸ்தானத்துடன் பிரிட்டனின்வாலில் தான் தொங்கப்போகிறார். அப்படித் தொங்கும்போது எல்லைப்புறமும் கூடச் சேர்ந்து தொங்கவேண்டுமென்பதற்காகவே எங்கள் மாகாணத்தைப் பாகிஸ்தானுடன் சேர்க்கப் பிரிட்டிஷார் சூழ்ச்சி செய்கின்றனர்.

ருஷியத் தாக்குதலினின்றும் தப்பித்துக்கொள்ள எல்லைப்புறத்தில் பிரிட்டிஷார் தம் படைகளை நிறுவ நிச்சயித்திருக்கிறார்கள். பட்டாணியராகிய எங்களை நாசப்படுத்தி, எங்கள் பூமியை யுத்த பூமியாக்கி, எங்களுடன் ருஷியாவை மோதப்பண்ணுதற்குப் பிரிட்டனும் ஜின்னாவும் சதியாலோசனை செய்து இருக்கிறார்கள். இந்த ஆபத்திலிருந்து எங்கள் நாட்டைப் பாதுகாக்கப் பட்டாணியர் அனைவரையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

## பெண் ஆணாகிறாள்!

பீகார் மாகாணத்திலே பவானித்தோலா என்னும் ஓர் கிராமம் உண்டு. அங்கே வசிக்கும் 40 வயதுப் பெண் ஒருத்தி ஆணாக மாறிவருகிறாள் என்று ஓர் பத்திரிகை தெரிவிக்கிறது.

குறித்த பெண்ணுக்கு ஏற்கெனவே பல பிள்ளைகள் உண்டு. 12 வருஷ காலத்துக்குமுன் இவளுடைய அங்கங்கள் பெண்தன்மை மாறி, ஆண் தன்மையாகத் தொடங்கின. இப்போது அவளுடைய முகம்மாறி ஆண்களைபபோலவே இருக்கிறாள்.

இது ஓர் நூதனமான விஷயம் அல்லவென்றும், இப்படியாகப் பெண்கள் ஆண்களாக மாறிய சம்பவங்கள் உலகில் அநேகம் உண்டு என்றும் வைத்திய நிபுணர்கள அபிப்பிராயப்படுகிறார்கள்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—19)

### "ஆனைகட்டச் சங்கிலி தானே யெடுத்துக் கொடுக்கும்"

அடுத்தநாட்காலை, நேரம் எட்டு எட்டரை மணிவரையிலிருக்குமெனலாம்-முருகேசன் வேலாயுதன் வீட்டிற்குப் போனான்; போனபோது வேலாயுதன் முருகேசனை,"வா தம்பி முருகேசு" என்று அழைத்தானாயினும், வேலாயுதன் முகத்திலாக அவன் மனையாள் முகத்திலாகமலர்ச்சியில்லை யென்பதை முருகேசன் அவதானித்தான்; அந்த நேரத்தில் அவன் பரிமளத்தைக் கண்டிலன்; முருகேசன் உள்ளத்திற் சந்தேகங் கொண்டானாய், "அண்ணே, என்ன விசேஷம்" என வேலாயுதனை வினவ, அவன், "அந்தச் சம்பந்தஞ் சந்திக ாதுபோலிருக்கிறது" என்று பெருமூச்சுடன் சொல்ல, முருகேசன் மனமுடைந்தானாய், "என்ன,அண்ணே! எல்லாம் நிச்சயமானபின், மாப்பிள்ளை தாலி கூறையெல்லாம் தேடிய

னென்பதும் இப்பொழுது புலப்படுகின்றது; சனப் பொறுப்பில் வரவிருக்கும் சுயராச்சியத்தின் பலா பலன்களை நாம் இப்பொழுது சொல்லுதல் முடியாது; வரவிருக்கும் அந்தச் சுயராச்சியம்,"டொமினியன் ஸ்ராற்றஸ்" எனப்படும் சுயராச்சிய முறை எனச்சொல்லப்படுகிறது.

பின்பு, இப்படியொரு சம்பந்தம் நடக்கப்போகிறதென்று அயலட்டத்திலுள்ளவர்களெல்லாம் அறிந்தபிறகு, நேற்று இங்கேவந்து பெண்ணை மாப்பிள்ளை பார்த்ததன்மேல், இன்றைக்கு நான் ஏதுஞ் சந்தோஷமான செய்தியை உங்கள் வாயிலாக அறியலாமென்று வந்த இந்த நேரத்திலே, அண்ணே, நீங்கள் அந்தச் சம்பந்தஞ் சந்திக்காதுஎன்று சொல்வது முறையல்லவே; இனி நான் அந்த ஆளுடைய முகத்தில் விழிப்பதெப்படி? அந்த ஆளுக்கு என்ன மறுமொழி சொல்வது" என்று அதிக கவலையோடு சொன்னான்; "தம்பி, முருகேசு, நீ சொல்வது முழுவதும் ஞாயம்; எங்களிலாக, எங்கள்பிள்ளையிலாக, உன்னிலாக ஒரு பிழையுமில்லை; ஆனை கட்டச் சங்கிலி தானெயெடுத்துக்கொடுக்கும்என்றவிதமாக அந்த மாப்பிள்ளை தாமே தம்மைப் பழுதாக்கிக்கொண்டார்: தம்பி,பெண்ணைப்பற்றி நீ சொன்ன அளவில் அந்த ஆள் திருப்திப்பட்டிருக்க வேண்டியது; உன் வார்த்தையில் நம்பிக்கை யில்லாமையினாற்போலும், நேற்று அவர் இங்கே பெண் பார்க்க வேண்டுமென்று வந்து பார்த்துவிட்டுப் போனார்; அவர் பெண்ணைப்பார்ப்பதற்கிடையில் பெண் மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டாள்; பார்த்தவிடத்திலே மாப்பிள்ளையிற் பெண்ணுக்குப் பிடிக்கவில்லை; அந்த நிமிஷந் தொடக்கம் அவள் இந்த மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட மறுக்கிறாள் தம்பி: இதற்குநான்என்னசெய்வது; இந்தத் தாயென்ன செய்வது; நீதான் என்னசெய்வது; இதற்காகத்தான் தம்பி, எங்கள் காலத்திலே பெண்ணை மாப்பிள்ளை பாராமலும் மாப்பிள்ளையைப் பெண் பாராமலும் எங்கள் மூதாதையர் ஒருகட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள்; அந்தநியாயத்தை இந்த நாளிற் சொன்னால், என்னைப் பைத்தியகாரனென்று இக்காலத்து வாலிபர் கன்னியர்கள் பரிகசிப்பர்" எனச் சொல்லிமுடித்தான் வேலாயுதன்.

### 'கொண்டாருங்கொடுத்தாங்கூடக்கூடக் கொட்டிவந்த பறையன் தூரத்தூர"

இவைகளையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த முருகேசன் சிறிதுநேரம் யோசித்தான்; "பெற்றாருக்குச் சம்மதமானாலும், பெண் சம்மதியாவிட்டாற் கல்யாணஞ் செய்து வைப்பதனாலே நன்மை யுண்டாகாதென்பது நிசம்: இசைவில்லாமற் செய்த இல்வாழ்க்கை எக்காலத்தும் பிணக்குக்குஞ் சண்டைக்குமே ஏதுவாகும்; ஒரு சம்பந்தத்தைச் சிரமப்பட்டுப் பேசி நிறைவேற்றியபின் அந்தத் தம்பதிகள் நல்லாய் வாழ்ந்தால், செய்துவைத்த நம்மைப் போன்றவர்களைப்பற்றி அத்தம்பதிகளாக, சம்பந்திகளாக அதிலும் நன்மை சொல்லமாட்டார்கள்; விதிவழியே நடந்ததென்றுமாத்திரஞ் சொல்லிக்கொள்வார்கள்; சம்பந்தஞ்செய்துகொண்ட இருபகுதியாரும் நல்லாய் உரிமை பாராட்டிக் கொண்டாடிக்கொள்வார்கள்: அந்த நேரத்திலே இப்படியான சம்பந்தத்தைச் சிரமப்பட்டுப் பேசி நிறைவேற்றிவைத்த எம்மைப்போன்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நாட்டின் எதிர்காலம்

## சுதந்திர அறிக்கை வெளியானது!

### அரசியல்வாதிகள் அவதானிக்கவேண்டியன

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்)

எல்லாரும் எதிர்பார்த்த இலங்கையின் டொமினியன் அந்தஸ்துப் பிரகடனம் சென்ற புதன்கிழமை 5 மணியளவில் அரசாங்கசபையில் மேன்மை தங்கிய இலங்கைத் தேசாதிபதியவர்களினுல் வெளியிடப்பட்டது இந்த நாட்டின் எதிர்கால சுபீட்சத்துக்கு ஏதுவாய ஓர் விஷயத்தைச் சாதாரண ஓர் அறிக்கைமூலம் வெளியிடாமல் தாமே நேரேவந்து, இலங்கை மகாஜனங்களின் பிரதிநிதிகளான அரசாங்கசபை யங்கத்தவர்கள் முன்னிலையில் கூறவேண்டும் எனத் தாமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் விரும்பியதைத் தேசாதிபதி அறிவித்து, 1931-ம் ஆண்டில் டொனமூர் அரசியற்றிட்டம் அமுலுக்கு வந்தநாள் தொடக்கம் இற்றைவரை இலங்கை, அரசியல் விஷயமாக அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறிப்பிட்டு, இலங்கை இப்போது தனது அரசியலைத் தானே நிருவகிக்கும் ஆற்றலுடையதாக இருப்பதால் அதற்கு டொமினியன் அந்தஸ்து எனப்படும் சுயராச்சியத்தை வழங்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் நிச்சயித்திருக்கிற தென்பதை அறிவித்தார். இலங்கை டொமினியனுக மாறுவதற்கான ஏற்பாடுகள் கூடிய சீக்கிரத்திற் செய்யப்படும். புதிய பாராளுமன்றம கூடியதும் இலங்கை டொமினியனுக மாற்றப்படுவதை அங்கீகரிக்கும். அதற்கிடையில் இங்கிலாந்துக்கும், இலங்கைக்குமிடையே ஓர் சில உடன்படிக்கைகள், பரஸ்பர சம்மதத்துடன் ஒழுங்குசெய்யப்படும். சுருங்கச் சொல்லுங்கால் 1948-ம் ஆண்டு ஜனவரிமாதத்துக்குமுன் இலங்கை சுயராச்சியநாடாகும்

●

### காரணம் என்ன?

நமது அயல்தேசமும், தாய்நாடுமாகிய பாரத நாட்டு மக்கள் ஏறக்குறைய 100 ஆண்டுகாலமாக எத்தனையோ தியாகங்களைப் புரிந்து தம் பிறப்புரிமையாம் சுயராச்சியத்தை அடைய இருக்கின்றனர். சின்னம் சிறிய இலங்கை, இந்தியாவுடன் ஒப்பிட்டு நோக்குமளவில், இவ்விஷயத்தில் எவ்வித தியாகத்தையும் செய்யாது அதே சுயராச்சியத்தை இலகுவிற் பெற்றுக்கொண்டமை மகிழ்ச்சிக்குரிய ஓர் விஷயம். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த இலங்கைவாசிகள்மீது கொண்டுள்ள ஓர் பேரபிமானத்தால் இந்தச் சுயராச்சியத்தைத்தர முன்வரவில்லை. நடந்து முடிந்த மகாயுத்தம் உலகத்திற் பல மாறுதல்களைச் செய்துவிட்டது. இன்றைய உலக நிலைமையில் பிரிட்டன் தன் உயிருக்கே போராடுகின்றது. அமெரிக்காவின் வர்த்தகப் போட்டியும், ருஷியாவின் சமதர்ம விஸ்தரிப்புத் திட்டமும் பிரிட்டனுக்கு நடுக்கம் கொடுத்துவருகிறது. பிரிட்டிஷ் மக்கள் உயிர்வாழவேண்டுமானுல், அவர்களுடைய வர்த்தகம் பெருகவேண்டும் வர்த்தகச் சரக்குகளை முன்போல இனியும் பிரிட்டன் வேற்றுநாடுகளில் திணிக்க முடியாது. சமரசம் மூலமாகவே, தனது வர்த்தகத்தை அது அபிவிருத்தி செய்தாகவேண்டும். இந்தியா, இலங்கை மலேயாபோன்ற நாடுகளின் ஒத்துழைப்பு அதன்பொருட்டு வேண்டும். ருஷியச் செல்வாக்கு கிழக்குப்பகுதியிலும், மத்திய கிழக்கிலும் பரவுமானுல் பிரிட்டன்நாடு அதோகதிதான் அந்தச் செல்வாக்கைத் தடுப்பதற்குக் கிழக்கிலும் மத்தியகிழக்கிலும் அதன் ராணுவத்தை நிறுவக் கேந்திரஸ்தானங்கள் தேவை இந்தியாவில் (பாகிஸ்தானத்தில்) சிற்றகாங், காராச்சித் துறைமுகங்களும், இலங்கையில் திருக்கோணமலையும், மலேயாவில் சிங்கப்பூரும், துருக்கியில் டார்டனல்ஸ்ஜலசந்தியும் இன்றுபிரிட்டனின் கேந்திரஸ்தானங்களாகவுள்ளன. இவற்றைப்பலப்படுத்திப் பாதுகாக்கவேண்டுமானுல், அவைஎந்தஎந்த நாடுகளில் உண்டோ அந்த அந்த நாடுகளின் நல்லெண்ணம் தமக்குவேண்டு மென்பதைப் பிரிட்டிஷார்உணர்ந்துவிட்டனர். அந்த நல்லெண்ணத்தைப் பெறுவதற்காக அவற்றுக்குத் தாஞகவே சுயராச்சியம் வழங்க இங்கிலாந்து முன்வந்துளது,

### சாவதானம் வேண்டும்

இலங்கைக்குச் சுயராச்சியம் கிடைத்துவிடும் என்பதில் நாம் எல்லாரும் சந்தோஷமடையவேண்டியது. ஆனுல், இனி, இங்கிலாந்து, இலங்கை என்னும் இருநாடுகளுக்கு மிடையே ஏற்படும் உடன்படிக்கைகள் விஷயத்தில் நாம் மிகவும் சாவதானமாக இருக்கவேண்டும். இலங்கை ஓர் சிறிய தீவு அதற்கு இங்கிலாந்துபோன்ற ஓர் வல்லரசின் உதவி தேவைதான்: ஆனுல் நாம் இவ்விஷயத்தில் எமது அயல்நாடாகிய இந்தியாவின் எதிர்கால நிலைமையுடன் எம்நாட்டையும் சம்பந்தப்படுத்திப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்து ஆராயமுன்னர் இங்கிலாந்துடன் சாஸ்வதமான ஓர் உடன்படிக்கை செய்தல்முறையாகாது. நேர்மாருக அது ஆபத்துக்கிடமானது என்பதே எனதுநம்பிக்கை. பாகிஸ்தானைஒழிந்தபாரதநாடுஇப்போதைக்கு டொமினியனுக இருக்க நிச்சயித்தபோதிலும், அது ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் டொமினியன் அந்தஸ்து வேண்டாம் என்று சொல்லி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைவிட்டு நீங்கித் தனியரசாக நிற்கும் என்று நிச்சயமாக நம்பலாகும். இந்திய அரசியல் நிர்மாணசபை தீர்மானித்திருக்கும் பிரதான விஷயம் அதுதான். அப்படி இந்தியா தனியரசாக விளங்குங்காலத்தில், தனது அயல்நாடாகிய இலங்கையிலே பிரிட்டிஷ் படைகள் இருப்பதையோ, இலங்கை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இருந்துகொள்வதையோ இந்தியா அதிகம்விரும்பமாட்டாதுஎன்பதைஇப்போதேநமது அரசியல்வாதிகள் சிந்தித்துக்கொள்ளுதல் நலம், இலஙகை பிரிட்டிஷாரின் உதவியை நாடுவதைவிட, எங்கள் அயற்கண்டமாகிய-கலை, ஆசாரம், சமயம் என்பவற்றில் எங்களுடன் ஒற்றுமை பூண்டளம் தாய் நாட்டுடன் அதிக தொடர்பு வைத்து வேண்டிய நேரத்தில் அதன் உதவியைப் பெறுதல் மேல் அல்லவா? ருஷியச் 'சமதர்மக்' கொடுமைகளிலிருந்தும் மேல் நாட்டவரின் வர்த்தக ஆசையிலிருந்தும் எம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள ஒரேயொரு வழிதான் உண்டு. பாரதநாட்டுடன் ஓர் சாஸ்வதமான நேச உடன்படிக்கை செய்துகொள்ளுதலே அது.

●

### பெரும்பான்மைத் தலைவர்களுக்கு

சுயராச்சியத்தைப் பெறுதல் இலகு; ஆனுல் அதனை இந்த அணுக்குண்டு யுகத்திலே பாதுகாத்தல்தான் கஷ்டம். இந்த இலங்கை தனிப்பட்ட சமூகத்தாரைமாத்திரம் உடையதல்ல பல்வேறு சமூகத்தாரும், சாதியாரும் வசிக்கிருர்கள். இவர்கள் எல்லாரும் திருப்தியாக வாழ்ந்தால்தான் இந்தப்பெரிய—மதிப்பற்ற—பொக்கிஷமான சுதந்திரத்தைக் காப்பாற்றி, நாம் எல்லாரும் சுதந்திர வீரர் எனத்தலைநிமிர்ந்து நிற்கலாம். இனி, நாமே சர்வாதிகாரிகள் என்று பெரும்பான்மைச் சாதியினரோ அவர்களுடைய தலைவர்களோ எண்ணுவரேயானுல், நிகழ்வது அநர்த்தந்தான்! இலங்கைபோன்ற செல்வ வளம் பொருந்திய நாட்டைத் தம் ஆதிக்கத்திற்குட் கொண்டுவர பிரிட்டிஷ் சிங்கம் போனுலும், வேறும் எத்தனையோ கொக்குகளும், வல்லூறுகளும், கழுகுகளும், காடிகளும் காத்துப் பதுங்கும் என்பது நிச்சயம். இந்த நாட்டிலே சிறுபான்மையினர் கொடுமையாக நடத்தப்படுகிருர்கள், அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற காரணத்தைக் கொண்டு, இந்த விலங்குகள் இங்கே நுழைவர். அவற்றிற்குத் தேசத்தைக் காட்டிக்கொடுக்கச் சில கோடரிக்காம்புகளும் இருக்கவே இருக்கச்செய்வர். ஹிட்லர் போலந்துமீது எந்தக் காரணத்தைக்கொண்டு படையெடுத்தார்? முசோலினி அல்பேனியாமீது என் படையெடுத்தார்? எனவே, இவ்விஷயத்தில் பெரும்பான்மைத் தலைவர்கள் மிகவும் சாவதானமாக இருத்தல்வேண்டும் என்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

### வகுப்புவாதம்

அதிகாரமும் பொறுப்பும் இனி அநேகமாகப் பெரும்பான்மையினரான சிங்களர்க்கே வரும். அதுதான் ஜனநாயகமுறை. அதனையிட்டுஎவரும் குறைகூறமுடியாது ஆனுல் அத்தலைவர்கள் சிறுபான்மையினர் மனத்தில் "சிங்கள ராஜ்யம் வந்தபடியால் எமக்கு அது செய்யவில்லை, இது செய்யவில்லை" என்ற எண்ணம் ஏற்படவிடவொண்ணுது. எந்தச் சாதியார் மத்தியிலும், எந்தச்சமூகத்தவர் மத்தியிலும்,வகுப்புத் துவேஷத்தைப் பிரசாரம் செய்து, அதன்மூலமாகத் தலைவர்ப் பதவிக்கு வர முயற்சிப்போர் இருப்பர்தான். அவர்கள் செல்வாக்கைக் கெடுக்கவேண்டுமானுல், சிறுபான்மைப் பொதுஜனங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தப் பெரும்பான்மைத் தலைவர்கள் மனப்பூர்வமாக உழைத்தல்வேண்டும். "எல்லாரும் ஓர் இலங்கையின் மக்கள்" என்று வாய்ப்பந்தல் போடுவது மாத்திரம் போதாது.

●

### தமிழர்முன் நிற்கும் பணி

சிறுபான்மையினராகியவர்களும் இனி அடிமைத்தனத்தை அறவே ஒழிக்கவேண்டும். பெரும்பான்மையினராகியவர்களுக்கு இந்நாட்டில் எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை தமக்கும் உண்டென்ற திடசித்தம் கொள்ளல்வேண்டும். "நாம் சிறுபான்மையினர்" என்ற எண்ணத்தை அறவே ஒழிக்கவேண்டும். இன்று இலங்கை சுயராஜ்யப் பாதையை அடைந்துவிட்டதென்றுல், அதற்குமூலகாரணர் எங்கள் தமிழ்ப் பெருமக்கள்தான் என்பதை நாம் மறக்கவொண்ணுது. தமிழர் சிறுபான்மையினர்தான்! ஆனுல் தங்கள் கல்வியால், அறிவால், அநுபவத்தால், ஆற்றலால் அரசியல் ஞானத்தால் இனியும் இலங்கைக்கு வழிகாட்டிகளாகியே தீரவேண்டும். தமிழ்மக்கள் இங்கே சிறுபான்மையினராகவிருந்தபோதிலும், உலகில் எம்மவர் 3 கோடி மக்கள்வரையில் உளர் என்பதை நாம் மறக்கமுடியாது. அந்த ஒரு எண்ணமுமே, எங்களை இங்கே,

"தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா."

என்று நாமக்கல் கவிஞருடன் சேர்ந்து வீர முழக்கம் செய்யத் தூண்டும்.

# பொலிஸ் பாதுகாப்பு!

## பயங்கர இயக்கத்தை ஒழிக்கத் தீர்மானம்

இலங்கையின் புகைரதப்பாதைகளிலும் வண்டிகளிலும் நிகழும் கிருத்திரியங்களை ஒழிக்கப் புகைரதப் பகுதியாருடன் பொலிஸ்பகுதியாரும் ஒத்துழைக்க இப்போது நிச்சயமாகிவிட்டது. புகைரதப் பாதைகளில் சதிகாரக் கும்பல்கள செய்யும் கிருத்திரமத்தைத் தடுப்பதற்காக, ஆயுதபாணிகளான பொலிசார் இனி ஒவ்வோர் புகைரதப் பாதையிலும் செல்வர் பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் புகைவண்டிகளுக்கு முன், ஆயுதம் தரித்த பொலிசார் ஓர்வண்டியிற் சென்று புகைரதப்பாதைகளைப்பரிசோதித்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன,

புகைரத வண்டிகளிலிருந்து சாமான்கள் களவாடப்படுவதைத் தடுக்கவும் பொலிஸஉதவி இப்போதுகிடைத்திருக்கிறது.

இது இவ்வாருக கொழும்பில் வேலைநிறுத்தம் மெல்லமெல்லவாகத் தேய்ந்துவருகிறது. சமசமாஜிகளுடைய உத்தரவையும் கேளாமல் துறைமுகத்துக்கும், ரத்மலானைப் புகைரதப் பகுதித் தொழிற்சாலைக்கும் தொழிலாளர் மீண்டுவிட்டனர். பல தொழிலாளர் சமசமாஜக் கட்சியிலிருந்து நீங்கி, மிஸ்ரர் குணசிங்ஹாவின் தொழிற்சங்கத்திற் சேர்ந்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

ரத்மலானைத் தொழிற்சாலைக்கு முன்னுல், வேலைநிறுத்தம்செய்த தொழிலாளர் மீண்டும் வேலைக்குப்போக நிற்கும்போது சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஒருவர், "வேலைக்குப் போகவேண்டாம்; அரசாங்கம் பணிந்துவிடும்" என்று அங்குள்ளவரை நோக்கிப் பிரசங்கம் செய்ய, அவர்களில் ஒருவன், 'உங்கள் சமசமாஜிகள் எங்களுக்குச்செய்தது போதும்; வாயைமூடு" எனறு சொல்லி, அந்தச் சமசமாஜியை புடைத்துவிட்டு வேலைத் தலத்துக்குள் நுழைய அவனைப் பின்பற்றிப் பன்னூற்றுக்கணக்கானேரும் வேலைக்கு மீண்டனராம்,

# முதல் "கவர்னர் ஜெனரல்"

## சுயராஜ்யம் பெறுவதில்சேர். ஒலிவர் பங்கு

நமது அரசியல் நிருபர்

இலங்கை சுயராஜ்ய அந்தஸ்துப் பெறுவதில் சேர் ஒலிவர் குணத்திலகா எவ்வளவு தூரம் தம் செல்வாழ்க்கை உபயோகித்தார்?

சேர் ஒலிவர் இப்போது இங்கிலாந்தில் "லீவில்" நிற்கிருர். இங்கே முன்னர்ச் சேனதிபதியாக விருந்த சேர் ஜிலோப்பிரோ லெயிற்றன் உட்படப் பல பிரிட்டிஷ் பிரமுகர்களும், ஸோல்பெரிப் பிரபுபோன்ற பல அரசியல் வாதிகளும் சேர் ஒலிவரின் நெருங்கிய நண்பர்கள் என்றுங் கூறலாம். யுத்த காலத்தில் இலங்கையின் ஊர்ப் பாதுகாப்பதிகாரியாயிருந்தபோது சேர் ஒலிவரின் திறமையும் அவர் இலங்கையை உள்நாட்டுப் பாதுகாப்பு விஷயத்தில் நிர்வகித்த முறையும் பிரிட்டிஷ் அரசியல் வாதிகளின் மனதை மிகவும் ஈர்த்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது. சேர் ஒலிவரின் பெயரைத் தேசாதிபதி சென்ற புதன்கிழமை தமது பிரசாரணத்திற் குறிப்பிடாவிட்டாலும், இதனை அவரும் பிரிட்டிஷ் அதிகார வர்க்கமும் மனதில் வைத்திருக்கின்றனர் என்பது வெளிப்படை.



முதல் "கவர்னர் ஜெனரல்"?

ஸோல்பெரித் திட்டம் அமுலுக்கு வந்து, 3 ஆண்டுகளின் பின்னர்த்தான் ஏனைய அரசியற் சீர்திருத்தங்கள் வழங்குவதுபற்றி யோசிக்கப்படும் என்றுபொதுவாக நம்பப்பட்டு வந்தது. சிறுபான்மையினரைச் சிங்களர் எவ்வாறு நடத்துகின்றனர் என்பதை நன்கு கூர்ந்து அவதானித்த பின்னரே அரசியல் சீர்திருத்தம் பற்றி பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் யோசிக்கும் என்றும் சில சிறுபான்மைத் தலைவர்கள் சொல்லிவந்தனர், ஆனுல் இவை யாவும் இன்று என்னுயது?

இங்கிலாந்திலே லீவில் நிற்கும் "அதிர்ஷ்டசாலி' சேர் ஒலிவரின் எதிர்காலம் என்ன? இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்க மிகவும் முயற்சி செய்த இவர் முதற் பிரதம மந்திரியாகமாட்டார் என்பது மாத்திரம் இப்போதுள்ள நிலையில் நிச்சயம். ஆனுல் டொமினியனின் முதல் பிரதம தேசாதிபதி (கவர்னர் ஜெனரல்) யாக அவர், மிஸ்ரர் சேனநாயக்காவின் ஆலோசனைப்படிக்கு, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவாரானுல், நாம் ஆச்சரியப்படுதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Notice of Sale
### கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்
இல. 2702 P

பருத்தித்துறை
1. ஏரம்பு விஞயகமூர்த்தியும்
2. பெண் நவரத்தினம்மாவும்
வழக்காளிகள்

பருத்தித்துறை
1. சண்முகம் கணேசபிள்ளையும்
2. பெண் மகாலெட்சுமியும்
3. குமாரசாமி கைம்பெண் தங்கம்

வல்வெட்டித்துறை
4. செல்லப்பா நவரத்தினம்
5. பொன்னுச்சாமி கைம்பெண் செல்லம்
6. பொன்னுச்சாமி வேதவனம்

பருத்தித்துறை
7. பொன்னுச்சாமி செல்வத்துரை

வல்வெட்டித்துறை
8. வேதவனம் சின்னத்தம்பி

பருத்தித்துறை
9. சின்னத்தம்பி சரவணமுத்து
10. „ சுப்பிரமணியம்
11. சபாபதிப்பிள்ளை தங்கராசாவும்
12. பெண் வள்ளியம்மாள்
13. சிற்றம்பலம் கைம்பெண் மாணிக்கம்
14. விஞசித்தம்பி தங்கராசா
15. குழந்தைவேலு சந்திரசேகரமும்
16. பெண் கவுரி அம்மாவும்
17. முருகப்பர் நமசிவாயமும்
18. பெண் தெய்வானைப்பிள்ளையும்
19. முருகப்பர் அமிர்தலிங்கமும்
20. பெண் சின்னப்பிள்ளையும்

சுதுமலை
21. கோபாலு கதிர்காமமுதலி

கொழும்பு
22. கோபாலு சிங்காரவேலு

பருத்தித்துறை
23. குமாரசுவாமி கந்தசாமி எதிரிகள்

மேற்கூறிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் 1947-ம் ஆண்டு ஆடி மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் 2 கண்டங்களாகப் பிரிவிடப்பட்டு அவ்வாதனத்தில் நின்று ஒவ்வொரு கண்டத்தின் மதிப்புத் தொகையிலிருந்து முதலாவதாகப் பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத்தவறினல் உடனே அந்த இடத்திலே பிரசித்த ஏலத்திலும் என்னல் விற்கப்படும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸதிறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று பருத்தித்துறை வென்றி பாகுதேவன் குறிச்சி வடலித்தோட்டம் நிலப்பரப்பு 9 8/5. இதில் தென்மேற்குப் புறமாக பிரிவிடப்பட்ட நிலப் பரப்பு 1 8/5 ஆனல் உலாந்தா மேஸ்தர் வே. சிவரத்தினம் அவர்களால் 433-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட பிரிவிடல் படத்தில் அளந்து கண்டபடி நிலப்பரப்பு 1 குளி 7 32/8. அதற்குட்பட்ட கல் கட்டடங்களும் குடிசைகளும், புளியம் கொப்புகளும, தென்னைமரமும். எல்லை: கிழக்கும்; வடக்கும், சிதம்பர அம்பலவாண சுவாமி கோவிலுக்குரிய ஆதனம். மேற்கு, ரோட்டு. தெற்கு, பசுபதீசுவரன் கோவிலும் குளமும். இதன் மதிப்பு ரூபா 2850 56 சதம்,

(1) 1-ம் கண்டம் குளி 12, 32/40. மதிப்பு ரூபா 1402.78. எல்லை: கிழக்கும், வடக்கும் சிதம்பர அம்பலவாணசுவாமி கோவிலுக்குரிய ஆதனம. மேற்கு, ரோட்டு. தெற்கு, 2-ம் கண்டம்,

(2) 2-ம் கண்டம் குளி 12 32/40 மதிப்பு ரூபா 1447.78 எல்லை கிழக்கு, சிதம்பர அம்பலவாண சுவாமி கோவிலுக்குரிய ஆதனம். வடக்கு, 1-ம் கண்டம், மேற்கு ரோட்டு. தெற்கு பசுபதீஸ்வரன்கோவிலும் குளமும்.

**வி. முதலியார் குழந்தைவேலு**
கொம்மிஷனர்

பருத்தித்துறை, 7-6-47
(Misc. 60.—20-6-47)

### மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசை

நிகழும் சர்வசித்து வருஷம் ஆனி மாசம் 9-ந் திகதி (23 6-47) ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை வழக்கப் போல் யாழ்ப்பாணம் இந்து மகாசபை ஆதரவில் லங்கா கல்லூரி மண்டபத்தில் மாலை 7 மணிக்கு நடைபெறும்.

## Notice of Sale
### கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்
1 துன்னலை தெற்கு வேலுப்பிள்ளை நடராசாவும்
2 பெண் மங்கையர்க்கரசியும்
மேற்சொல்லிய வழக்காளிகளின் தத்துவகாரன் துன்னலை தெற்கு வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை
வழக்காளிகள்

இல. 2812 P
1 துன்னலை தெற்கு சரவணமுத்து இராசாங்கமும்
2 பெண் அழகம்மாவும் எதிரிகள்

மேற்சொல்லிய இலக்கப் பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் 1947-ம் ஆண்டு ஆடி மீ 23 ந்உ புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் மதிப்புத் தொகையிலிருந்து முதலாவதாக பங்காளருக் கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினல் உடனே அந்த இடத்திலே பிரசித்த ஏலத்திலும் என்னல் விற்கப்படும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலி கோயிற்பற்று, துன்னலை செகற்கொடி தேவன் குறிச்சி நீங்குவில் வயல் நிலப் பரப்பு 3 குளி 5 32/14 இது உலாந்த மேஸ்தர் மா. வேலுப்பிள்ளை அவர்களால் 1947-ம் ஆண்டு பங்குனி மாதம் 9 ந் திகதி 976 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் விபரிக்கப்பட்ட ஆதனம், எல்லை கிழக்கு சின்னையா பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு சரவணமுத்து கைம்பெண் தங்கம்மாவுடைய ஆதனம் தெற்கு வேலுப்பிள்ளை பெண் குமாரத்தினத்துடைய ஆதனம். இவ்வெல்லைகளுக் குட்பட்ட அடங்கலும் ஆதனமதிப்பு ருபா 2379 21.

**வி. முதலியார் குழந்தைவேலு**
கொம்மிஷனர்.

பருத்தித்துறை
11—6—47.
Mis 61 20—6—47


### ஆங்கிலம்

மூன்று மாசத்தில் ஆங்கிலம் எழுதப் பேசப் பயிற்றிவிடலாம்; ஓய்வுள்ள நேரத்தில் நீரே வீட்டில் படித்துக் கொள்ளலாம். தபால் மூலமாகவே நாங்கள் பயிற்றி வருகிறோம்; மாசவேதனம் ருபா 2–50.

**அற்லஸ் ஹால்**
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Postal School
P. O. Box 649
Colombo.

Std 19 27-5 — 25-8-47


### மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

நிகழும் சர்வசித்து ஆனி மாதம் 9-ந் திகதி (23.6-47) ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை வழமைபோல் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் கீழ்க்காணும்கிரமப்படி நடைபெறும்.

#### நிகழ்ச்சிகள்

மு. ப 10 மணி தொடக்கம் 2 மணி வரை நீராவியடி திலகவதியார் மடத்தில் கடவுள் ஆராதனை நால்வர்பூசை புராணபடனம், திருவாதவூரடிகள் புராண படனம்—திருவடிபெற்ற சருக்கம் மாகேசுர பூசை.

மாலை 6½ மணி தொடக்கம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் திரு. வே. கந்தையா அவர்கள் மாணிக்கவாசகரும் மனித வாழ்க்கையும் என்னும் பொருள் பற்றி ஒரு பிரசங்கஞ்செய்வார்கள்.

காரியதரிசி
சைவபரிபாலனசபை

18—6—47
யாழ்ப்பாணம்

## Notice of Sale
### கோட்டுக் கொம்மிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்
புலோலி மேற்கு, வீரகத்தியார் கைம்பெண் வள்ளிப்பிள்ளை. வழக்காளி

இல. 2662P
1. புலோலி தெற்கு வல்லியப்பர் இராமலிங்கம் 2. பெண் தங்கம்மாவும் 3. புலோலி கிழக்கு வேலப்பர் கந்தையாவும் 4. பெண் செல்லம்மாவும் 5. நட்மலானு வேலப்பர் முருகேசுவும் 6 பெண் அன்னம்மாவும் 7 நட்மலானு கிருஷ்ணபிள்ளை இராமலிங்கம் 8. நட்மலானு கிருஷ்ணபிள்ளை இராசேந்திரம் (பராயமற்றவர், பராபரிப்புக்காறன் 7-ம் எதிரி) 9. புலோலிமேற்கு பி. விஞயகமூர்த்தி 10. பெண் நாகரத்தினமும் எதிரிகள்.

மேற்கூறிய இலக்கப்பிரிவிடல் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் 1947-ம் ஆண்டு ஆடி மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் 2 கண்டங்களாகப் பிரிவிடப்பட்டு அவ்வாதனத்தில் நின்று ஒவ்வொரு கண்டத்தின் மதிப்புத்தொகையிலிருந்து முதலாவதாக பங்காளருக்கிடையிலும் அவர்கள் வாங்கத் தவறினல் உடனே அந்த இடத்திலே பிரசித்த ஏலத்திலும் என்னல் விற்கப்படும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப்பகுதி புலோலி கிழக்கு மளவராய குறிச்சி பராகிலபாண்டி நிலப்பரப்பு 2 குளி 11 16/15. இது உலாந்தா மேஸ்தர் க வேல்முருகு அவர்களால் 1946ம் ஆண்டு ஆனிமீ 20ந் திகதியில் 2379ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் விபரிக்கப்பட்ட ஆதனம் இதற்குட்பட்டவைகளுடன், எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு 3ம் எதிரிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு ஆள்வான் பொன்னியுடைய உரிமைக்காறருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். ஆதன மதிப்பு ரூபா 1401-88

(1) 1ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி 10 16/12 மதிப்பு ரூபா 1003 74. எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு 3-ம் எதிரிக்கும் மறுபேருக்குமுடைய ஆசனம். தெற்கு 2ம் கண்டம்.

(2) 2ம் கண்டம் நிலப்பரப்பு 1 குளி 1 16/3. மதிப்பு ரூபா 401 14. எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு 1ம் கண்டம், மேற்கு 3ம் எதிரிக்கும் மறுபேருக்குமுடைய ஆசனம், தெற்கு ஆள்வான் பொன்னியுடைய உருமைக்காறருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம்.

**வி. முதலியார் குழந்தைவேலு,**
பருத்தித்துறை, கொம்மிஷனர்.
9—6—47 Mis 59 20—6—47

### தேவை

கோப்பாய் மத்திய ஐக்கிய பண்டசாலைக்கு 28-7-47 தொடக்கம் ஓர் மனேச்சரும் விற்பனையாளனும் வேண்டும். விற்பனையாளனை மனேச்சரே ஒழுங்குசெய்ய வேண்டும். மனேச்சருக்கு மாதம் 50 ரூபாவும் விற்பனையாளனுக்கு 30 ரூபாவும் சம்பளம் கொடுக்கப்படும். வியாபார அநுபவம் உள்ளவராயின் சம்பளம் கூட்டிக் கொடுக்கப்படும். மனேஜர் 500 ரூபா பிணை கட்டவேண்டும். விரும்பியோர் 15-7-47 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி
மத்திய ஐக்கிய பண்டசாலை
கோப்பாய்
15—6—47
M 65 20—24-6-47

### சினிமா நடிகர் மரணம்

மதுரைவீரன், பாஞ்சோதி, பக்த ஹனுமான் முதலிய எண்ணற்ற பல சினிமாப்படங்களில் நடித்துள்ள பிரபல சினிமா நடிகர் ஸ்ரீ வீ. ஏ. செல்லப்பா ஐயர் சென்றவாரம் சென்னை ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் ரத்தக்கொதிப்பால் மரணமடைந்தார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

ஹாஸ்ய நடிகை டி. எஸ் கிருஷ்ண வேணியும் சென்றவாரம் தேகவி[illegible]

### ஸ்ரீ அம்பலவாணர்க்கு ஆதரவு

சென்றவாரம் புங்குடுதீவுக் கிராமச்சங்கக் கட்டிடத்தில், பொறளை திரு. கா. நாகலிங்கம் அவர்கள் தலைமையின்கீழ் ஓர்பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்திற்குப் பெருந்திரளானவர்கள் சமுகமளித்திருந்தனர். தலைவர் முகவுரைக்குப் பின் நிகழ்கால அரசியல் நிலைமையும் எதிர்கால அரசியலமைப்பும்பற்றிச் சிலர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின் எதிரே வரும் இலங்கைப் பாராளுமன்றத்திற்குத் தீவுப்பகுதி வாசிகளிலொருவரைத் தெரிந்தனுப்பவேண்டுமென ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதைப் பலர் ஆதரித்துப் பேசினர். அதன்பின் "நம்நாட்டின் நிலைமையை நன்கறிந்தவரும், பொதுநல அபிமானியுமாகிய" திரு. க. அம்பலவாணர் அவர்களை ஏகமனதாகத் தெரிவு செய்யவேண்டுமென, திரு. சி சரவணமுத்துசாமி அவர்களால் ஓர் பிரேரணை கொண்டுவரப்பட்டது. திரு. நீ. ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள் ஆமோதிக்கச் சபையோரின் சம்மதத்துக்கு விடப்பட்டுப் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது,

—கடிதம்.


நாகப்பட்டணம் மார்க்கம்
சிங்கப்பூர், பிஞங்
கப்பல்

**புறப்படுந் தேதி**

கோஸ்ரே — 18-6-1947
ருஜாலா — 2-7-1947
கோஸ்ரே — 16-7-1947
ருஜாலா — 30-7-1947

தற்கால நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஏற்ற வசதிகள் செய்வதற்குத் தகுந்த அவகாசமளிக்கும்நோக்கத்துடன் எம்மிடம் பிரயாணச் சீட்டுப் பெற விரும்புவோர் உங்கள்

**பெயரைத் தாமதமின்றிப் பதிவு செய்துகொள்ளுங்கள்**

**எஸ். ஆர். எஸ். நாதன்**
15. சிவப்பிரகாசம் ரோட்,
ஐயனர்கோவிலடி :: வண்ணர்பண்ணை

Std 23. 6-6-47—6-6-48

**பசந்த லேகியம்**

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to , 1—4—48

விளம்பரமின்றேற் பெரும்பணமில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

(2ம் பக்கத் தொடர்ச்சி

றவர்களைத் திரும்பியும் பாரார்கள்; இதனாலல்லவா, கொண்டாருங் கொடுத்தாருங் கூடக் கூட, கொட்டிவந்த பறையன் தூரத்தூர என்ற பழமொழி எங்கள் நாட்டிலே வழங்குகின்றது; ஆனால் அத் தம்பதிகட்கிடையே பிற்காலத்திற் பிணக்குநேர்ந்தால், இல்லையேல் தரித்திரம்வந்தால் "அந்த அநியாயப்பட்ட கல்யாணத் தரகன்தானே ஏதோ ஒருபகுதியிற் பணத்தை வாங்கிக்கொண்டு எங்கள் பிள்ளையை இப்படி அநியாயமாக வீழ்த்திவிட்டான்" என்று அபவாதஞ் சொல்வார்கள்: இது உலகவியல்பு; இந்த விஷயத்திலே பெண்ணுக்கு ஏதும் சமாதானஞ் சொல்லி இக்கல்யாணத்தை நிறைவேற்றிவிடலாமோ என்றால் பெண் ஒருபோதும் உடன்படாளென்பது நிசம்; அல்லாமலும் இந்தச் சம்பந்தப் பேச்சுக் குழம்பியது என்னாலல்ல; என் பேச்சைமாப்பிள்ளை கேளாமல் நம்பாமல் விட்டதனால் வந்த கேடு; ஆனபடியால், நான் இப்பொழுதே போய் அந்த ஆளுக்கு விஷயத்தைத் தெரிவிப்பேன்; நீங்களும் தீர்க்கமாக யோசித்துச் சொல்லலாம்" என்று முருகேசன் வேலாயுதனையும் மனைவியையுங் கேட்க, "தம்பீ, நாங்கள் யோசிக்கக்கூடியவரையில் யோசித்துவிட்டோம்; இனி யோசிக்க இடமில்லை; எங்கள் பிள்ளைக்குப் பின்னுக்குச் சங்கடத்தைத்தேடிவைக்கவொண்ணாது; தம்பி முருகேசு, நீர் குறை நினைக்கவேண்டாம்; உள்ளதைப் போய் அந்த ஆளிடம் சொல்லிவிடும்" என்று வேலாயுதன் சொல்ல, முருகேசனும் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு கவலையோடு போவானாயினான்.

### "பரிகாசமா? நிசந்தானா?"

முருகேசன் சிந்தனையோடு கூடியவனாய், தனது வீட்டிற்குப் போதலின்றி நேரே விஜயரத்தினம் வீட்டிற்கே சென்றான்; அவன் வரவைக் கண்ட விஜயரத்தினம் அந்த நேரத்தில் அவனை முகமலர்ச்சியோடு உபசரித்து இருக்கச்செய்து, அவன் பக்கலில் தான வந்து இருந்துகொண்டு, "இனி என் விஷயத்தில் ஒரு தடையுமில்லை: பெண்ணை ஒருகாற் கண்ணாற் பார்க்கவேண்டுமென்ற ஆசையுந் தீர்ந்தது; இனி எங்கள் கல்யாணத்திற்காகிய ஆயத்தங்களையும் முயற்சிகளையும் துரிதமாகச் செய்து முடிக்கவேண்டும்: நாளைமுதல் நீர் உமது வீட்டிற்குப் போய்ப் போய் மீண்டு வருவதைவிட்டு, இங்கே தானே எங்கள் விவாகம் நிறைவேறும் வரையில் தங்கியிருக்கவேணும்; இங்கே உமக்கு ஆகவேண்டிய சௌகரியங்களெல்லாஞ் செய்யலாம்: விரும்பினால் இரவில் பத்துமணிக்கு மேல் ஒருமுறை உங்கள் வீட்டிற்குப் போய் உடனே மீண்டுவரலாம்: இல்லையேல் அன்றிரவு விடிவதற்கு முன் நாலு நாலரைமணி வரையில் மீண்டு இங்கு வந்தீரானாற் போதும்; இந்த உதவியை நீர் மறக்காமல் எனக்குச் செய்யத்தான் வேண்டும்; நானோ அதிகம் உற்றார் உறவினர் இல்லாதவனாவேன்; இது நீர் அறியாததல்ல; என்னுடைய உற்றார் நண்பர் தூரித்த ஊர்களில் வசிக்கிறார்களென்பது மெய்; ஆனாலும் அவர்களையெல்லாம் இந்த நேரத்திலே இங்கே அழைப்பதனால் வீண் சிரமமும் பொருட்செலவுமல்லாமல் வேறு கண்ட பயன் ஏதுமில்லையாம்: மேலும் அவர்கள் இங்கே வந்தாற் குலம் பேசுவார்கள், சாதி விசாரிப்பார்கள்; தத்தம் மனம் போனபடி ஆளுக்கொரு குற்றஞ் சொல்லுவார்கள்; ஆனதால் அவர்கள் இப்போதைக்கு வேண்டாம்; நீரே போதும்; நீர்தாம் என் நெருங்கிய சுற்றமும் நண்புமாவீர்...." என்று ஓயாமற் பேசினான்; விஜயரத்தினம இப்படியெல்லாம் சொல்லிய போதும் முருகேசன் "உம்" என்று கேட்டானுமல்லன்; இடையில் ஏதும் பேசினானுமல்லன்: உடனே விஜயரத்தினம் அவனுடைய முகத்தை உற்று நோக்கினான்; அவனது முகத்தில் மலர்ச்சியைக் கண்டிலன்; விஜயரத்தினம் ஏங்கினான்; திகைத்தான்; "ஏதும் விசேஷமோ" என்றுபதைப்புடன் வினவினான்; "அப்படி மோசமான விசேஷமொன்றுமில்லை; நான் இப்பொழுது பெண்வீட்டிலிருந்துதான் நேரே இங்கு வருகிறேன்: விவாக விஷயத்திலே பெற்றாருக்குச் சம்மதம்; பெண் மாறுபட்டு நிற்கிறாள்; அதனால் இப்பொழுது நாம் தீர்க்கமாக ஒரு ஆயத்தமுஞ் செய்யவொண்ணாது..." என்று சொல்லி முடிப்பதற்கிடையில், விஜயரத்தினம் "என்ன! பெண் மாறுபட்டுநிற்கிறாளா? நீர்சொல்வது பரிகாசமா? நிசந்தானா?" என்று மனம்பதற, சரீரம் நடுங்கக் கேட்டான்; "பரிகாசமல்ல, நிசந்தான்" என்றான் முருகேசன்.

விஜயரத்தினம்: காரணம்?

முருகேசன்: காரணம் பெண்ணை நீர் பார்க்கப்போனதுதான்.

விஜய: ஆம், பார்த்தேன்; பெண்ணில் எனக்கு நல்லாய்ப் பிடித்துக் கொண்டது; அதனாலென்ன?

முரு. அதனாலொன்றுமில்லை; பெண்ணும் மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டாள்.

விஜய: பார்த்துவிட்டாளா? ஆனால் பார்த்தாலும் நான்தான் மாப்பிள்ளையென்பதை அவள் அறியாளே மாப்பிள்ளையின் நெருங்கிய சுற்றத்தவனென்றுதானே என்னைப் பற்றிப் பெண் வீட்டிலே சொல்லியிருந்தீர்; அதுதானே நிசம்.

முரு: ஆம், அப்படியே நான் அப்பெண்ணின் பெற்றாருக்குச் சொல்லியிருந்தேன்; அவர்களுந் தங்கள் மகளுக்கு அப்படித்தான் சொல்லியிருந்தார்கள்; ஆனால், பெண் நீர் இருந்த நிலையைக்கொண்டோ, பார்த்த பார்வையைக்கொண்டோ, நானறியேன் நீர்தாம்மாப்பிள்ளையென்று அயிர்த்துவிட்டாள்.

விஜ: நன்தான் மாப்பிள்ளையென்று அவள் அயிர்த்திருந்தால், என்னைப்பார்த்து முன்னரைக்காட்டிலும் அதிகமாகவிருப்பப்பட்டிருப்பாளே; நானென்ன....... அழகிற் குறைவா? தோற்றத்திற் குறைவா? கெம்பீரமான நடையிற் குறைவா? இல்லையேல் கல்வியறிவு செல்வம் செல்வாக்கு சாதி குலம் மரபு என்னுமிவைகளிற் குறைவா? அல்லது முதுமை என்னிற் புலப்படுகிறதா? அவள் என்னை வெறுக்கக் காரணமென்ன?

"இந்தக் கேள்விகளை அந்தப் பெண்ணிடத்திற்றான் கேட்டுக் காரணமறியவேண்டும்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் முருகேசன்; அப்போது விஜயரத்தினமும் பெருந்துயர் கொண்டானாய், "முருகேசரே, என்மனம் பெரிதுஞ் சஞ்சலப்படுகிறது. இந்தக் கல்யாணம் நிறைவேறினாலென்ன, நிறைவேறாதொழிந்தாலென்ன, அதைப்பற்றி இனிமேல் எனக்குக் கவலையில்லை; ஆனாற் கல்யாணம் நடக்கப்போகின்றதென்ற செய்தி மெல்லமெல்ல ஊர் முழுவதும் பரவிவிட்டது: இப்பொழுது அப்படிநடவாமற் குழம்பியதற்குக் காரணமென்ன என்றதைத் தான் அறிய விரும்புகிறேன்; உள்ளதைச் சொல்லும்; என்மேற் பெண்ணுக்குப் பிடிக்கவில்லையா" என்று கவலைமீதூர இதமாகக் கேட்டான்; "அப்படித்தான் எண்ணக்கிடக்கிறது" என்றான் முருகேசன்: "நீர் இன்று காலை அந்த வீட்டிற்குப் போனபோது நடந்ததென்ன சொல்லும்" என்று விஜயரத்தினங் கேட்க, முருகேசன் நடந்த விஜயம் முழுவதையும் ஒன்றையும் ஒளியாமற் சொன்னான்.

(வரும்)

## ஜின்னாவின் சின்னத்தனம்

### மீண்டும் விதண்டா வாதமா?

மகமதலி ஜின்னா மீண்டும் தம்சின்னத்தனத்தைக் காட்ட முன்வந்து, இந்திய அரசியல் வானத்திற் குழப்பத்தை உண்டாக்க முயற்சிக்கிறார் என்று தெரிகிறது. இந்தியாவில் உள்ள சமஸ்தானங்கள், ஒன்றில் இந்தியச் சமஷ்டியிற் சேரவேண்டும், அல்லது பாகிஸ்தான் சமஷ்டியிற் சேரவேண்டும் என்று காங்கிரஸ் கோருகிறது. பாகிஸ்தானுக்குச் சமீபமாக, முஸ்லீம்களைப் பெரும்பான்மையினராகக்கொண்ட சமஸ்தானங்கள், பாகிஸ்தானத்துடன் சேரவும், ஹிந்துக்களைக்கொண்டுள்ள சமஸ்தானங்கள் இந்தியச் சமஷ்டியிற் சேரவும் வேண்டும் என்று காங்கிரஸ் கேட்கிறது. அதன்படி பட்டியாலா, ஜோட்பூர், பரோடா, கொச்சி முதலாம் பிரதான சமஸ்தானங்கள் ஏற்கெனவே இந்தியச் சமஷ்டியிற் சேர்ந்துவிட்டன. இப்போது மைசூரும் சேரத் தீர்மானித்துவிட்டது. ஆனால் சேர். ஸீ. பி. இராமசாமி ஐயரின் பசப்புமொழியில் ஏமாந்துள்ள திருவிதாங்கூரும், ஹைதராபாத்தும், போபாலும் தாம் ஒன்றிலும் சேராது சுயாட்சியப் பிரகடனம் செய்யப் போகின்றனவாம். இந்தக் கொள்கையை இப்போது ஜின்னா சாய்பும் ஆதரிக்கிறார். சமஸ்தானங்களை இவ்விஷயத்தில் வற்புறுத்தக்கூடாது என்று காங்கிரஸ் தலைவர்களுக்கு இத்த ஜின்னா சாய்பு அரசியல் ஞானம் படிப்பிக்க முன்வந்துவிட்டார்.

சோழியன்குடுமி சும்மா ஆடாது! சமஸ்தானாதிபதிகள்மீது ஜின்னாவுக்குத் திடீரென அநுதாபம பிறந்தமைக்குக் காரணம் என்ன? தன்னை இதுவரை ஆதரித்து ஆளாக்கிவைத்த ஹைதராபாத்தின் "பக்ஷை"க்காப்பாற்றவே ஜின்னாசாய்புஇந்தச் சூழ்ச்சியைக் கைக்கொண்டிருக்கிறார் என்பதை ஹிந்துக்கள் அறியாமலில்லை. பாகிஸ்தான் சாம்ராஜ்யத்தில் சக்கரவர்த்தியாகமிளிரலாம் என்று கனவு கண்டு ஜின்னாவை இந்த நிலைமைக்கு வரச்செய்த நிசாம் மன்னர்க்குச் செஞ்சோற்றுக் கடன்தீர்க்க ஜின்னா சாய்பு இன்று செய்யும் தகிடுதத்தங்கள் ஓயும்நாள் தூரத்திலில்லை.

சமஸ்தானங்கள் விஷயத்துடன் மாத்திரம் ஜின்னாசாய்பு நிற்கவில்லை. இந்தியச் சமஷ்டிக்குரிய அரசியல் நிர்மாணசபையில் சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம, அஸாம், மத்திய மாகாணம், பீகார், ஒரிஸா என்னும் மாகாணங்களில்முஸ்லிம்லீக் பிரதிநிதிகள இனிப்பங்குபற்றலாமென்று தீர்மானமாயது அல்லவா? இந்தப்பிரதிநிதிகள் விஷயத்தில் ஜின்னாஇப்போது விதண்டாவாதம் புரிகின்றாராம். இதுவரை அரசியல் நிர்மாணசபை, லீக் பிரதிநிதிகளின்லாமற் செய்த தீர்மானங்களை நீக்கிவிட்டு, இனிப் புதிதாக யாவற்றையுந்தீர்மானிக்கவேண்டும். அதுவுமன்றி, முஸ்லிம் லீக்கர் எந்தப் பிரேரணையையாவது ஆட்சேபித்தால், அப்பிரேரணையை அரசியல் நிர்மாணசபை நிறைவேற்றக்கூடாது. இப்படியான நிபந்தனைகளை முன்னரே விதித்துக்கொண்டுதான் முஸ்லிம்லீக்கர் அரசியல் நிர்மாணசபையிற் பங்குபற்றவேண்டும் என்று ஆக்கினை விடுத்திருக்கிறாராம். அகண்ட ஹிந்துஸ்தானத்தின் மனத்தை ஜின்னா ஏற்கெனவே புண்படுத்தியிருக்கிறார். இனியும் புண்படுத்த நினைத்தல் முறையல்ல: நீதியல்ல: பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. ஆகஸ்டுமாதம் 15ம் திகதிக்கு முன் பிரிட்டிஷார் வெளியேறி விடுவர். அத்திகதி அதிகம் தூரத்தில் இல்லை என்பதை மாத்திரம் ஜின்னா ஊன்றிச் சிந்தித்தால் அவரும் முஸ்லிம் சமூகமும் ஈடேறும். அவ்வளவுதான்.

---

### உலகம்பலவிதக்கதை பற்றிய அபிப்பிராயம்

வித்துவான்பண்டிதர் கா. பொ. இரத்தினம்

'உலகம்பலவிதக்கதை படிக்கப் படிக்க இன்பம் தருகிறது. கேவலம் காம இச்சையை மாத்திரம் பொருளாகக் கொண்டு புற்றீசல்கள்போலத் தோன்றும் கதைகள் நிறைந்த இக்காலத்தில், உங்கள் கதை குன்றில் இட்ட விளக்குப்போலப் பிரகாசிக்கிறது. வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கதையை வளர்ப்பதால் எவ்வாறு அறிவையும் ஒழுக்கத்தையும் வளப்படுத்தலாம் என்பதை அது எடுத்துக் காட்டுகிறது. ஆகவே தமிழ் இலக்கியத்தில் அதற்கு ஒரு தனி இடம் உண்டு''.

## செய்தித் திரட்டு

யாழ்ப்பாணம் பாஷையூரில் உள்ள எஸ். வியக்தி, டி. ஜெயக்கொடி என்னும் இரு பாடசாலைச் சிறுமிகள், பாஷையூர் அர்ச். அந்தோனியார் ஆலயத்துத் திருவிழாப் பார்த்துக்கொண்டு நிற்கையில் அங்கே திருவிழாவுக்கென வைக்கப்பட்டிருந்த வெடிகள் வெடித்தமையால் பலமான காயப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

0 0 0

ஈச்சமோட்டையைச் சேர்ந்த வி. சின்னத்துரை என்பவரின் மகனாகிய தர்மலிங்கம் என்னும் 2 வயதுக் குழந்தை ஓர் கிணற்றில் வீழ்ந்து மூழ்கி மாண்டதாகத் தெரிகிறது.

0 0 0

மட்டுவில் தெற்கு வாசியான இளையதம்பி சின்னையா என்பவர் ஒருபுசல் அரிசியை அநுமதியில்லாமல் வேற்றிடம் சென்றார் என்ற குற்றத்தின் பேரில் சாவகச்சேரி நீதிபதியால் 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

0 0 0

நீர்கொழும்புப் புகைரதப் பெட்டிக்குள் இருந்த பெருந்தொகையான அரிசி மூடைகள் யாரோ சிலரால் களவாடப்பட்டுவிட்டதாம்.

---

## மைசூர் சேருகிறது

### அரசியல் நிர்மாண சபைக்கு 7 பிரதிநிதிகள்

இந்தியாவின் அரசியல் நிர்மாண சபையிற் சேர மைசூர் சமஸ்தானம் நிச்சயித்துவிட்டது அச்சமஸ்தானத்தின் பிரதிநிதிகளாக ஏழுபேர் அச்சபையில் அங்கத்துவம் வகிப்பர்.

சீக்கிய மன்னர் எல்லாரும் இந்தியச் சமஷ்டி அரசியலிற் சேரவேண்டும் என்று கல்கத்தாவில் நிகழ்ந்த ஓர் சீக்கியர் மகாசங்கம் தீர்மானித்திருக்கிறது.

---

## வண்மேற்கு—காட்டுத்துறை

### நடராச அபிஷேகமும் உற்சவமும்

வண்ணார்பண்ணை மேற்குக் காட்டுத்துறைக் கருணாகர வைரவ-பகவதி மாரியம்மை கோயிலில் எழுந்தருளிய சிவகாம சுந்தரி சமேத நடராசமூர்த்திக்கு, ஆனியுத்தர புண்ணிய தினமாகிய இந்த மாசம் 11-ந் திகதி (25-6-47) புதன்கிழமை பகல், விசேஷ அபிஷேகமும், அன்று பிற்பகல் 5 மணிவரையில் (தெருவீதி) உற்சவமும் நிகழுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசித்த விளம்பரம்

பிறிமியர் ரெட்டிச்சாய்ப்பின் கிளை ஸ்தாபனம் ஒன்று காங்கேசன் துறையிலே, யாழ்ப்பாணம் — காங்கேசன்துறைப் பெருந் தெருவிலுள்ள 210-ம், இலக்க இல்லத்தில் நிகழும் 1947—ம் ஆண்டு ஆனி மாசம் 11-ந் திகதி புதன்கிழமை தொடக்கம் திறக்கப்பட்டிருக்கிறது



அனைவோரும்இதனை ஆதரிக்கும்படியாய் பரிவாகக் கேட்கப்படுகின்ருர்கள்.

# பிறிமியர் பேக்கறி

(1865-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது)

பேதுருப்பிள்ளை ரெட்டிச்சாய்ப்பெனப் பிரஸ்தாபமாக அறியப்படுவது

ரொட்டி, பிஸ்கற்வகைகள், கேக்குகள் செய்து கொடுப்பதில் முதன்மைவாய்ந்தது

**யாழ்ப்பாணமும், காங்கேசன் துறையும்**

பேக்கறி, தெலிபோன்: யாழ்ப்பாணம், 44.

ஸ்ரோர்ஸ் & கவே, தெலிபோன்: யாழ்ப்பாணம், 63.

Std 22 6 6.47—6-7-47.


**விளம்பர மன்றேல் பெரும் பணமில்லை**


# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம் - பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ் வங்கி

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிறோட், யாழ்ப்பாணம். வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:- இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்

சேமிப்புப் பணம்:- ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:- இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:- அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:- இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:- ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்,

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

( Std. 12 2-8—31 7-47)


# திருச்சி ரேடியோ

**சனி யூன் 21**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-20 தமிழில்செய்திகள் 7-30 வி கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 தஞ்சாவூர் எஸ் கே ரங்கய்யா பாகவதர் பாட்டு 8 30 சித்ரகானம் 9 முடிவு.

1 வி கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குரல்வகை இசைத்தட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 தஞ்சாவூர் எஸ கே ரங்கய்ய பாகவதர் பாட்டு 2 45 முடிவு

மாலை 5 காரைக்கால் எஸ் சுந்தர காமாட்சி பாட்டு 5-40 திருவிளையாடல் புராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 காரைக்கால் எஸ் சிந்தர காமாட்சி பாட்டு 7 15 ராணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு வசதிகள் 7-30 தமிழில் செய்திகள் 7-45 ஏ நாராயண ஐயர் கோட்டுவாத்தியம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 புதுமைக்கனவு நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஜே துரைசாமி பியானோ 10 இசைவேளை 10 30 முடிவு

**ஞாயிறு யூன் 22**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே என் பக்கிரிசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி சௌடையா வயலின் இசைத்தட்டு 8-30 வி ஆர் ரங்கநாதன் வயலின் 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12-30 ஊர் ஊர்வலம் 12-40 மந்தையின் மாடு திரும்பையிலே 12-45 காரியதரிசிக்கு வரவேற்பு 12-55 லயசக்கரம் புதுவகை 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 ஒலிமலர் முடிவு.

மாலை 5 கே என் பக்கிரிசாமி பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி ஆர் ரங்கநாதன் புல்லாங்குழல் 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 எம் கே சசிவம்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு,

**திங்கள் யூன் 23**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி டி ராமசாமிப்பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடகள் 8-30 வி ஏ நாராயணன் பாட்டு 9 முடிவு,

1 கதம்பம் 1-20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜி எஸ் கிருஷ்ணசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 ஜி எஸ் கிருஷ்ணசாமி பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 பி டி ராமசாமிபிள்ளை நாகஸ்வரம் 5-[illegible]0 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சாரதா அனந்தராமன் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 நாட்டு அமைதிக்கு 8 வி ஏ நாராயணன் பாட்டு 8-[illegible]0 சாரதா அனந்தராமன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-[illegible]0 அறிவிப்புகள் வானிலை 9-45 கே ஜே ஜோஸ தில்ருபா 10 கே பி சுந்தராம்பாள் இசைத்தட்டு 10-15 வீணை இசை இசைத்தட்டு 10-30 முடிவு.

**செவ்வாய் யூன் 24**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் எஸ் வடிவாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய இசை இசைத்தட்டு 8-30 பூவனூர் எஸ் சுந்தரேச முதலியார் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பூவனூர் எஸ் சுந்தரேச முதலியார் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2 05 பூவனூர் எஸ் சுந்தரேச முதலியார் புல்லாங்குழல் 2-15 கோடைக்கல்வி 2-45 முடிவு.

மாலை 5 எஸ் எஸ் வடிவாம்பாள் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் கே தியாகராச பாகவதர் இசைத்தட்டு 7-15 தாளவாத்யக் கச்சேரி 7 30 தமிழில் செய்திகள் 7.45 டி கே ரங்காச்சாரி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 எச் எஸ் மத்வாச்சார் கோட்டுவாத்யம் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

# நிஸாம் அட்டூழியம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கிறது. உருதுவே இராஜாங்கபாஷையாகிவிட்டது. அது தெரிந்தால்தான் எந்த வேலைக்கும் எந்த மனிதரும் மனுச்செய்து கொள்ளலாம். இன்னும் நிஜாம் அரசாங்கம் செகந்திராபாத்திலுள்ள ஆயுதத் தொழிற்சாலையைப் பலப்படுத்த ஆரம்பித்து விட்டது. பிரிட்டிஷ் அதிகாரிகளின் கீழ் சுமார் ஒரு லட்சம் படை நிரட்டி நிரந்தரமாக ஸ்தாபிக்கத் தீர்மானித்துள்ளது.

சென்ற 8 வருஷகாலமாக சமஸ்தானத்தில் சுமார் 6000 ஹிந்துக் குழந்தைகளைக் கடத்திச்சென்றனர். அரசாங்கமோ போலிசோ அவர்களை மீட்க எவ்விதப் பிரயத்தனமும் செய்யவில்லை. அவர்கள் இடத்தைக் கூட கண்டுபிடிக்கவில்லை. இந்த அழகில் நிஸாம் மன்னர் தர்பார் நடக்கிறது. ஆனால் இது எத்தனை நாட்களுக்கு?


# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

**பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)**

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மனேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, June, 20, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org